# முதன்மை சார்பு நீதிமன்றம், திருப்பூர்.

**DW–1 – OS. No.397/2018**

2026 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 18–ம் நாள் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு விதி 44 ஏற்பாட்டின்படி முதன்மை சார்பு நீதிபதி Dr.V.ஸ்ரீவித்யா, முன்னிலையில் திருமதி.ஜெயலட்சுமி கிரேடு 2 பென்ச் கிளர்க் அவர்களால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் : திரு.பாலமுருகன் | தொழில் : |
| த/பெ. : திரு. | வயது : |
| முகவரி : | மொபைல் எண்: |

**பிரதிவாதி தரப்பில் சாட்சி வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணத்தின் பேரில் முதல் விசாரணை தொடர்ச்சி**.

நான் இந்த வழக்கில் பிரதிவாதி. எனது தரப்பு சாட்சிக்காக நிரூபண பிரமாண பத்திரிக்கை தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரங்கள் உண்மையானவை. பிரமாண வாக்குமூலத்தை படித்துப் பார்த்து அதில் உள்ள விபரங்களை தெரிந்து கொண்டு வழக்குரைஞர் முன்னிலையில் கையொப்பம் செய்தேன். எனது தரப்பில் கீழ்கண்ட ஆவணங்கள் குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | 10.04.1996 | முருகவேல் பெயரில் உள்ள கிரையப்பத்திரம் | சான்றிட்ட நகல் | **பிவாசாஆ–1** |
| 2 | 30.04.2012 | மதிவாணன் பெயரில் உள்ள கிரையப்பத்திரம் | சான்றிட்ட நகல் | **பிவாசாஆ–2** |
| 3 | 23.11.2015 | தங்கம் பெயரிலுள்ள கிரையப்பத்திரம் | சான்றிட்ட நகல் | **பிவாசாஆ–3** |
| 4 | 12.09.2016 | பாலமுருகன் பெயரிலுள்ள கிரையப்பத்திரம் | சான்றிட்ட நகல் | **பிவாசாஆ–4** |
| 5 | 26.10.2015 | வில்லங்க சான்றிதழ் | இணையதள நகல் | **பிவாசாஆ–5** |
| 6 | 08.06.2018 | பட்டா எண்.2729 ன் புகைப்படம் | நகல் | **பிவாசாஆ–6** |
| 7 | 08.06.2018 | பட்டா எண்.2545 ன் புகைப்படம் | நகல் | **பிவாசாஆ–7** |
| 8 | 21.05.2018 | வில்லங்க சான்றிதழ் | இணையதள நகல் | **பிவாசாஆ–8** |

| | | | | |
|---|---|---|---|---|
| 9 | 29.05.2018 | வில்லங்க சான்றிதழ் | இணையதள நகல் | **பிவாசாஆ–9** |

ஆக குறியீடு செய்யப்படுகிறது. எனது தரப்பு சாட்சி மற்றும் ஆவணங்களை ஏற்றுக்கொண்டு பிராது படி தீர்ப்பு அளிக்க வேண்டுமாய் கேட்டு கொள்கிறேன்.

**<u>வாதி தரப்பில் சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணத்தின் பேரில் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை .</u>**

1.நான் எட்டாம் வகுப்பு வரை படித்திருக்கிறேன். நான் பர்னிச்சர் கடையில் வேலை செய்து வருகிறேன். அசல் வழக்கு 331/2018 மற்றும் 395/2018 மற்றும் 397/2018 என்று மூன்று வழக்குகளுமே நெருப்பெரிச்சல் கிராமம் க.ச.எண்.487 காலையில் அமைந்துள்ள எஸ்.ஜி.ஆர் நகர் சம்பந்தப்பட்ட மனை எண்.48 பொறுத்து தான் இந்த வழக்குகள் என்று சொன்னால் சரிதான். அமுதவல்லி தாக்கல் செய்திருக்கும் வழக்கு 48 ஆம் நம்பர் சைடில் மேல் புறம் அவருடையது என்று விளம்புவை கேட்டு தான் தாக்கல் செய்திருக்கிறார் என்றால் இருக்கலாம் அதே போல் சண்முகம் தாக்கல் செய்திருக்கும் வழக்கானது 48 ஆம் நம்பர் சைடில் கீழப்புரம் இருக்கும் பகுதி அவருக்கு பாத்தியம் என்று தான் வழக்கு தாக்கல் செய்திருக்கிறார் என்றும் சொன்னால் இருக்கலாம்.

2. நான் தாக்கல் செய்திருக்கும் இந்த வழக்கானது அதாவது அசல் வழக்கு 331/2018 வழக்கு நான் தான் 48 நம்பர் சைட் முழு உரிமையாளர் என்று விளம்பர செய்ய வேண்டும் என்று தான் கேட்டு இருக்கிறேன் என்றால் ஆமாம். வழக்கு சொத்தான க.ச.எண்.487 சுப்பராய கவுண்டர் மற்றும் ஒன்பதாம் பிரதிவாதிக்கு 23.03.1993 தேதியிட்ட பாக சாசன பத்திரத்தின் படி பாத்தியப்பட்ட 3 ஏக்கர் 37 1/2 சென்ட் பூமி என்று சொன்னால் சரிதான்.

3. அந்த மூணு ஏக்கர் 37 1/2 சென்ட் பூமியை தான் எஸ்.ஜி.ஆர் நகர் என்று லேஅவுட் செய்து சுப்பிராய கவுண்டரும்ஒன்பதாம் பிரதிவாதியான சின்னசாமி என்பவரும் விற்று வந்தார்கள் என்று சொன்னால் ஆமாம். அந்த சைட்டில் இருந்து தான் 48 ஆம் நம்பர் சைட் மேல்புற பகுதியை அமுதவல்லியும்

பெரியசாமி என்பவர் கீழப்புறப் பகுதியும் வாங்கி இருக்கிறார் என்று சொன்னால் அதைப்பற்றி எனக்கு தெரியாது.

4. அமுதவல்லியும் பெரியசாமியும் ஏற்கனவே அந்த சைட்டை தான் வாங்கி இருக்கிறார்கள் என்றும் எனக்கு விவரம் தெரிந்த இன்னும் வேண்டுமென்றே நான் பொய்யாக சாட்சியம் சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி சைட்டை வாங்கிய பின்பு சம்பந்தப்பட்ட இடங்கள் அமுதவல்லி இடமும் பெரிய சாமியிடமும் சுவாதீனத்தில் இருந்தது என்று சொன்னால் சரியல்ல.

5. அமுதவல்லியும் பெரிய சாமியையும் தான் முதன் முதலில் சம்பந்தப்பட்ட 48 நம்பர் சைடில் கிரைய பத்திரம் போட்டிருக்கிறார்கள் என்று சொன்னால் சரியல்ல நான்தான் போட்டிருக்கிறேன். அதனால் அமுதவல்லியும் பெரிய சாமியும் போட்டுக் கொண்ட ஆவணங்கள் தான் சட்டப்படி செல்ல தக்கவை என்றும் சொன்னால் சரியல்ல. பெரியசாமி இறந்து போய்விட்டார் என்று சொன்னால் எனக்கு தெரியாது அவருக்கு மனைவி ராதா மகன் ராஜேந்திரன் மற்றும் மகள் ராணி ஆகியோர் தான் அவருக்கு பின்னால் அவருடைய சொத்துக்களை அனுபவிக்கிறார்கள் என்று சொன்னால் எனக்கு தெரியாது.

6. பெரியசாமி இறந்து போனதற்கு பின்னிட்டு அவருடைய வாரிசுதாரர்களான அவருடைய மனைவி மக்கள் தான் 48 ஆம் நம்பர் சைட் இன் கீழுபுறத்தில் அனுபவத்திலிருந்து வருகிறார்கள் என்று சொன்னால் சரியல்ல. மேலும் பெரியசாமியின் வாரிசுதாரர்கள் 48 நம்பர் சைட் இன் கிழப்புறத்தை பொருத்தமட்டில் கோவிந்தராஜ் என்ற நபருக்கு பவர் எழுதிக் கொடுத்திருக்கிறார்கள் என்று சொன்னால் சரியல்ல. அவர்களிடமிருந்து தான் சண்முகம் 48 ஆம் நம்பர் சைட் இன் கிழப்புறத்தை கிரயம் பெற்று இருக்கிறார் என்றும் சொன்னால் சரியல்ல. அவர் கிரயம் பெற்ற தேதியிலிருந்து சைட் நம்பர்

48 ஆனது சண்முகத்தின் சுவாதீன அனுபவத்தில் தற்போது வரை இருந்து வருகிறது என்றும் சொன்னால் சரியல்ல.

7. 48 ஆம் நம்பர் சைட் இன் கிழப்புற பகுதி மற்றும் மேல் புறப்பகுதி இரண்டையும் சேர்த்தால் ஏழு சென்ட் வரும் என்று சொன்னால் சரிதான். சுப்பராய கவுண்டரும் சின்னசாமியும் சைட் நம்பர் 48 விற்ற பிறகு அவர்களுக்கு அந்த சைட்டில் உரிமை ஏதுமில்லை என்று சொன்னால் சரிதான். சுப்பராய கவுண்டரும், சின்னசாமியும் என் முன் கிரையததார் முருகவேல் என்பவரிடம் 10.04.1996 தேதியிட்டு தான் சைட் நம்பர் 48 என விற்பனை செய்துள்ளார்கள் என்று சொன்னால் சரிதான்.

8. அதேபோல் முருகவேல் இறந்ததற்கு பின்னிட்டு முருகவேலன் மனைவி மற்றும் குழந்தைகள் சேர்ந்து 5 முதல் 8 பிரதிவாதிகளுக்குஅவர்கள் என்று சொன்னால் சரிதான். அவர்கள் மேற்கொள்ள 48 நம்பர் சைட் 2012 ஆம் ஆண்டில் 3 மற்றும் 4 பிரதிவாதிகளுக்கு விற்பனை செய்தார்கள் என்று சொன்னால் சரிதான். அந்த மூன்று மற்றும் நான்கு பிரதிவாதிகள் 2015 ஆம் ஆண்டு 48 ஆம் நம்பர் சைட்டை இரண்டாம் பிரதிவாதி தங்கம் என்ற நபருக்கு விற்பனை செய்து இருக்கிறார்கள் என்று சொன்னால் சரிதான். மேற்சொன்ன தங்கம் என்ற நபர் தான் 2016 ஆம் வருடம் எனக்கு 48ம் நம்பர் சைட்டை விற்பனை செய்தார் என்றும் சொன்னால் சரிதான்.

9. முருகவேல் பெயரில் உள்ள கிரையப்பத்திரமும் சதீஷ் குமார் மற்றும் மதிவாணன் ஆகியோர் பெயரில் உள்ள கிரைய பத்திரமும் தங்கம் மற்றும்பாலமுருகன் பெயரில் உள்ள கிரைய பத்திரம் ஆகியவை செல்ல தங்கை அல்ல என்று சொன்னால் சரியல்ல. மேற்சொன்ன ஆவணங்கள் அமுதவல்லி மற்றும் சண்முகம் ஆகியவரின் உரிமைகளை எந்த விதத்திலும் பாதிக்காது என்று சொன்னால் சரியல்ல.

10. தற்போது வரை 48 ஆம் நம்பர் சைட் காலியாக தான் இருக்கிறது என்று சொன்னால் சரிதான். நானும் என்னுடைய முன் கிரையதாரர்களும் எந்த காலத்திலும் 48ம் நம்பர் சைட் அனுபவத்தையும் இருக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. மேற்சொன்ன ஆவணங்கள் மோசடியான ஆவணங்கள் என்று நான் மாவட்ட ஆட்சியரிடம் புகார் கொடுத்தேன் என்றும் சொன்னால் சரிதான். அந்த புகாரின் அடிப்படையில் மாவட்ட வருவாய் துறையினர் என்னிடம் விசாரித்தார்கள் என்றும் சொன்னால் சரிதான். மேலும் அந்த ஆவணங்கள் மோசடியாக தயாரிக்கப்பட்டவை என்று சொல்லி குற்றவியல் நீதித்துறை நடுவர் என் மூன்றில் ஒரு தனி புகார் கொடுத்திருக்கிறேன் என்றும் சொன்னால் சரிதான்.

11. மேலும் அசல் வழக்கு எண்.331/2018 தாக்கல் செய்வதற்கு முன்பே எனக்கு 48 நம்பர் சைட் அமுதவல்லி மற்றும் சண்முகம் ஆகிய பெயரில் கிரைய வாங்கி இருக்கிறது விவரம் தெரியும் என்றும் சொன்னால் சரியல்ல. என் நான் தாக்கல் செய்த வழக்கிலும் நான் எதிர்உரை தாக்கல் செய்திருக்கும் அசல் வழக்கு 395/2018 மற்றும் 397/2018 ஆகிய வழக்குகளில் நான் தாக்கல் செய்திருக்கும் எதிர்உரையிலும் இந்த விவரங்கள் அனைத்தையும் மறைத்து நான் தாக்கல் செய்திருக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

12.மேலும் சைட் நம்பர் 48 இல் அமுதவல்லி கட்டிடம் கட்ட முனையில் அதே சமயம் சண்முகம் அந்த இடத்தை சுத்தம் செய்ய போகும் போது தான் நான் பிரச்சனை செய்தேன் என்றும் அப்போதுதான் அவர்களுக்கு இந்த விவரமே தெரியவந்தது என்று சொன்னால் எனக்குத் தெரியாது.அசல் வழக்கு எண்.331/2018 தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றும் அசல் வழக்கு 395/2018 மற்றும் 397/2018 அனுமதிக்கப்பட வேண்டும் என்று சொன்னால் சரி அல்ல.நீதித்துறை நடுவரிடம் புகார் கொடுத்த பின்னிட்டு மேலும் பதிவுத்துறையினரிடம் புகார் கொடுத்ததற்கு பின்னிட்டு தான் அசல் வழக்கு

395/2018 மற்றும் 397/2018 ஆகிய வழக்குகளில் நான் எதிர்வழக்குரை தாக்கல் செய்திருக்கிறேன் என்று சொன்னால் சரிதான்.என்னுடைய எதிர்வழக்குரையில் அந்த இரண்டு புகார்களை பற்றியும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான்.

**மறுவிசாரணை இல்லை.**

சாட்சியின் வாக்குமூலமானது என் முன்னிலையில் பதிவு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

Dr.V.Sree Vidya,

Digitally signed by Dr.V.Sree Vidya,
Date: 2026.04.18 17:46:39 +0530

முதன்மை சார்பு நீதிபதி,
திருப்பூர்.